2. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

221. முன்னாள் பொது சுகாதாரத் துறையின் 9-2-1944 ஆம் தேதியிடப்பெற்ற 384 ஆம் எண் அரசாணையில் அனுமதிக்கப்பெற்ற நுங்கம்பாக்கம் மத்தியப் பகுதி நகரமைப்புத் திட்டத்தில் சில மாற்றங்கள் செய்வது குறித்து வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 22-10-1980 ஆம் தேதியிடப்பெற்ற 1385 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

222. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் அலுவல்சாரா உறுப்பினராக ஒரு வருட கால அளவிற்கு, முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. கே. எத்திராஜுவை நியமிப்பது குறித்து வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 11-8-1980 ஆம் தேதியிடப்பெற்ற 1016 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு-அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

223. நெல் (தவிட்டில் உள்ள அரிசி), அரிசி (உமி நீக்கப்பட்ட நெல்), சோளம், கம்பு, கேழ்வரகு, தினை, வரகு, சாமை, குதிரை வள்ளி, அரிசி உற்பத்திப் பொருள்கள் (உதாரணமாக அரிசி மாவு, அரிசித் தவிடு) கோதுமை, பால் ஆகியவற்றின் விற்பனையின் மீது செலுத்தத்தக்க வரியில் விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 3-1-1981 ஆம் தேதியிடப்பெற்ற 11 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

224. வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையில் 2-12-1980 ஆம் தேதியன்று தோன்றி, 24-12-1980 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம்-2, பிரிவு 1, பக்கம் 99-ல் வெளியான II(1)/755/80 ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து, வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 13-1-1981 ஆம் தேதியிடப்பெற்ற 45 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு, [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

1981 மார்ச் 21]

225. வருவாய்த்துறையில் 12–3–1965 ஆம் தேதியன்று தோன்றி, 15–3–1965 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம்-2, பிரிவு-1, பக்கங்கள் 1-6-ல் (ஆங்கிலத்தில்) வெளியான II (1)/1061/1965 ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து, வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 24–1–1981 ஆம் தேதியிடப் பெற்ற 11451/VIII-2/80-11 ஆம் எண் கடிதத்தில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (நீக்குதல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1963) 73 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.